**புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சு**

# டவர் மண்டப அரங்க மன்றம்

## வெற்றிடங்கள்

புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சின் கீழ் உள்ள டவர் மண்டப அரங்க மன்றத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பதவிகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு உரிமைத்துவமுடைய நிரந்தர பதவிகளாகும்.

### முகாமைத்துவ சேவை வகுதி: (MM 1-1)

**01. உதவி / பிரதிப் பணிப்பாளர் (நிதி) IIஆம் தரம் - பதவி எண்ணிக்கை - 01**

**பதவிக்குரித்தான கடமைகள்**

நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் மற்றும் கணக்கியல் தொடர்பில் பிரதானமாக பொறுப்புகூறல்.

வெளிவாரி விண்ணப்பதாரிக்குத் தேவையான தகைமைகள் மற்றும் அனுபவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றில் பெற்றுக்கொண்ட முகாமைத்துவம் / வர்த்தகம் / கணக்கியல் தொடர்பான பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டய கணக்கியல் நிறுவனமொன்றின் ICASL/ACA/ICMA/ACCA இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கணக்கியல் நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

   அல்லது
2. கனிஷ்ட முகாமைத்துவ (JM) சேவை வகுதியில் இயைபுடைய துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**ஏனைய தகைமைகள்**

கணனி பயன்பாடு மற்றும் ஆங்கில மொழியில் வேலை செய்யும் இயலுமை இருத்தல் வேண்டும்.

இலங்கை கணக்கியல் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பளம்** : ரூபா 53,175-1375x10-1910x 15 = 95,575/-

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**தெரிவு செய்யும் முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**இந்தப் பதவிக்குரித்தான சலுகைகள்**

- ❖ திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் தொழில்சார் கொடுப்பனவு உட்பட ஏனைய அனைத்துக் கொடுப்பனவுகளும்
- ❖ அரச வியாபார சுற்றுநிருபம் 02/2022 பிரகாரம் தொலைபேசிக் கொடுப்பனவு
- ❖ நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்கள்

### 02. ஆரம்ப தேர்ச்சி சேவை வகுதி - PL-3

**மேடை ஒளியமைப்பு தொழில்நுட்பவியலாளர் IIIஆம் தரம் - பதவி எண்ணிக்கை - 01**

**பதவிக்குரித்தான கடமைகள்**

ஆக்கபூர்வமான மேடை ஒளியமைப்பு மற்றும் அதற்குரித்தான நடவடிக்கைகள்

**தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மேடை ஒளியமைப்பிற்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**தகைமைகள் - உள்வாரி விண்ணப்பதாரிகள்**

இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவம் மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தொழில்சார் பரீட்சையொன்றில் (Trade Test) சித்தியடையும் ஆரம்ப அரைத்தேர்ச்சி (PL - 2) அல்லது ஆரம்ப தேர்ச்சியற்ற (PL - 1) சேவை வகுதி ஊழியர்கள்

அல்லது

மேடை ஒளியமைப்பிற்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் NVQ 4வது நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** ரூபா 26290 -10 x 270 – 10 x 300- 10 x 330- 12 x350 = 39490/-

- ❖ கவர்ச்சிகரமான மருத்துவ காப்புறுதித் திட்டமொன்று உரித்தாகும்.

**வயது :** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**தெரிவு செய்யப்படும் முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

### 03. ஆரம்ப அரைத் தேர்ச்சி சேவை வகுதி - PL-2

மேடை ஒளியமைப்பு தொழில்நுட்பவியல் உதவியாளர் IIIஆம் தரம் - பதவி எண்ணிக்கை - 01

**பதவிக்குரித்தான கடமைகள்**

ஒளியமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

**தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

மேடை ஒளியமைப்பிற்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் NVQ 2வது நிலைக்குக் குறையாத நிலையில் மேடை ஒளியமைப்பு தொழில்நுட்பவியல் தொடர்பான தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**தகைமைகள் - உள்வாரி விண்ணப்பதாரிகள்**

01. இயைபுடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவம் மற்றும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் இயைபுடைய பதவியின் கடமைகளுக்கு அமைவாக தொழில்சார் பரீட்சையொன்றினால் Trade Test உறுதிப்படுத்தப்படும் தேசிய தொழிற்றிறனில் ஏஜே 2வது நிலைக்குக் குறையாத நிலையில் தேர்ச்சி சகிதம் ஆரம்ப தேர்ச்சியற்ற (PL - 1) சேவை வகுதி ஊழியர்கள்

    அல்லது

02. மேடை ஒளியமைப்பிற்கு இயைபாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் NVQ 2வது நிலைக்குக் குறையாத நிலையில் மேடை ஒளியமைப்பு தொழில்நுட்பவியல் தொடர்பான தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** ரூபா 25750-10 x 270 -10 x300- 10 x 330-12x 350 = 38950/-

- ❖ கவர்ச்சிகரமான மருத்துவ காப்புறுதித் திட்டமொன்று உரித்தாகும்.

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**தெரிவு செய்யப்படும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**ஏனைய தகவல்கள்**

- ❖ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு - தொழில்தருநரின் பங்களிப்பு 15% ஊழியரின் பங்களிப்பு 10%
- ❖ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தொழில்தருநரின் பங்களிப்பு 3%
- ❖ அரச, அரசு சார்ந்த மற்றும் நியதிகள் சட்ட சபையில் சேவையாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

**சகல விண்ணப்பதாரர்களும்**

- ❖ இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- ❖ பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- ❖ வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கப்பட்டதன் பின் 03 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டும், உள்வாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்பட்டதன் பின் ஒரு வருடகால வேலை பார்க்கும் காலத்திற்கும் உட்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தமது தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பதாரரினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024-07-29ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரச, அரசு சார்ந்த மற்றும் நியதிகள் சட்ட சபையில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத்தின் தலைமையினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**சவ்சிறிபாய, இல. 123, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு 07.**
**2024-07-15**